## IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE (FAST TRACK COURT), VELLORE, VELLORE DISTRICT.

## DEPOSITION OF WITNESS

**OS.NO.** - **100/2020**
**P.W.3** - **செல்லப்பன் த/பெ.முனுசாமி**
**DATE** - **10.07.2023.**

**வா.சா.3 மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை.**

வாதி வெங்கடேசன் என்னுடைய நண்பர் எனறால் இல்லை. எனக்கு பழக்கமானவர். எவ்வளவு வருடங்களாக பழக்கம் என்றால் 10 வருடங்களாக பழக்கம். வாதி வெங்கடேசன் அவர் குடும்பத்துடன் காட்பாடி காந்தி நகரில் குடியிருந்து வருகிறார் என்றால் எனக்கு தெரியாது. வாதி மற்றும் அவர் குடும்பத்தினர் எங்கு வசிக்கிறார்கள் என்றால் செஞ்சியில் வசிக்கிறார்கள். பிரதிவாதி என் பெயரிலும் வாதி பெயரிலும் காவல்நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார். வாதி பெயரில் கொடுத்துள்ளது தெரியும். என் பெயரில் கொடுத்துள்ளது தெரியாது. வாதி தாக்கல் செய்துள்ள சிவில் மற்றும் தனி புகார் வழக்குகளில் நான் வாதி சார்பில் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரி தான். எத்தனை வழக்குகளில் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் ஒரே வழக்கில் சாட்சியம் அளித்துள்ளேன். அது எந்த வழக்கு என்றால் சூர்யகுமார் வாதி மீது தாக்கல் செய்த குற்றவியல் வழக்காகும். என்னுடைய முதல் விசாரணைக்கான பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் அனைத்தும் வாதி சொன்னது தான் என்றால் இல்லை. நான் சொன்ன விவரங்களின் அடிப்படையில் பிரமாண வாக்குமூலம் தயாரிக்கப்பட்டது. நான் சாட்சி கையொப்பம் போட்ட 3 புரோநோட்டுகளிலும் மற்றொரு சாட்சியாக கையொப்பம் போட்டுள்ளவர்கள் எனக்கும் வாதிக்கும் நண்பர்கள் என்றால் இல்லை. தெரிந்தவர்கள். வாதி காட்பாடி ஒடை பிள்ளையார் கோயில் தெருவில் ஒரு பைனான்ஸ் கடை நடத்தி வருகிறார் என்றால் எனக்கு தெரியாது. பாண்டு எழுதிய நபர் என்னுடைய நண்பர் என்றால் இல்லை. தெரிந்தவர். 3 பாண்டுகளும் அச்சடிக்கப்பட்ட பாண்டுகள் என்றால் இல்லை. கையால் எழுதப்பட்ட பாண்டுகள். பாண்டுகள் அனைத்தும் ஒரே நேரத்தில் எழுதப்பட்டது என்றால்

இல்லை. வெவ்வேறு நேரத்தில் எழுதப்பட்டது. இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க வேண்டி எனக்கு நீதிமனறத்தில் இருந்து அழைப்பாணை வந்ததா என்றால் இல்லை. வெங்கடேசன் அழைத்தன் பேரில் தான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் வெங்கடேசனும் சொன்னார். சூர்யகுமாரும் சொன்னார். வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள 3 பாண்டுகளும் நானும் வெங்கடேசனும் மற்றும் பாண்டில் சாட்சியம் கையொப்பம் போட்டுள்ள நபர்களும் சேர்ந்து தயார் செய்து தாக்கல் செய்துள்ளோம் என்றாலும் சூர்யகுமார் எந்த பாண்டும் எழுதி கொடுக்கவில்லை என்றாலும் எந்த பணமும் வாங்கவில்லை என்றாலும் சரியல்ல. தற்போது என்னிடம் காட்டபடும் 3 பாண்டுகளும் ஆரம்பத்தில் இருந்து முடிவு வரை அச்சடித்தது போல் ஒரே மாதிரியாக உள்ளது என்றால் எனக்கு வித்தியாசம் தெரியவில்லை. நான் வழக்கிற்காக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் 3 பாண்டுகளும் ஒரே நேரத்தில் தான் தயாரிக்கப்பட்டது என்றாலும சரியல்ல. நான் வேண்டுமேன்றே அனைத்து பாண்டுகளும் ஒரே நேரத்தில் தயாரிக்கப்பட்டதை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. சூர்யகுமாரின் பெயரில் எந்த விவசாய நிலமும் இலலை என்றால் எனக்கு தெரியாது. இதில் இருந்தே பிரதிவாதியை எனக்கு 10 ஆண்டுகளாக தெரியும் என்று நான் கூறியுள்ளது பொய் என்று தெரிய வருகிறது என்றால் சரியல்ல. சி, டி,இ, பாண்டுகள் முன்னிலைக்கு சூர்யகுமார் எந்த கடனும் பெறவில்லை என்றாலும் வாதி தயார் செய்த பாண்டுகளில் நான் கையொப்பம் செய்து விட்டு வாதிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

P REVATHY Digitally signed by P REVATHY

**Additional District Judge (FTC),**

Vellore.